மைசூரின் ஏழைகளின் கன்னி மாதா ஆலயம்.

மைசூரில் 1955 ஆம் வருடம் காலம் சென்ற மேதகு முனைவர் ரினி பூயுகா அவர்களால் கன்னி மாதா அவர்களுக்கு வழிபாடு தொடங்கப் பெற்றது. இது பிரான்சில் பானக்ஸ் என்ற இடத்தில் 1933ஆம் வருடம்  ஜனவரி மாதம் 15 அம் தேதியிலிருந்து 2 ஆம் தேதி மார்ச் மாதம் வரை நடத்தப்பெற்ற நம் சீமாட்டியின் தோற்றம் குறித்த தொடர்பானது. மறைந்த மேதகு பேராயர் புயூகா அவர்கள் பானக்ஸ் என்ற இடத்திலிருந்து புனித நீர் கொண்டு வந்து அதை இங்குள்ள குளத்தில் கரைத்து புனிதப்படுத்த அது இன்று வரை பக்தர்களால் மிக்க பக்தியுடன் உபயோகப்படுத்தப்படுகிறது.

கன்னி மாதா அவர்கள் மீது கொண்ட பக்தி பெரியதாக வளர்ந்து இன்று மைசூரில் ஆலயமாக உருவெடுத்துள்ளது. 1960 அம் வருடம் ஏழைகளின் சீமாட்டிக்கு (மாதா) ஆலயம் நிறுவப்பட்டது. இந்த ஆலயம் அமைக்கப்பட்டதிலிருந்து எண்ணற்ற பக்தர்கள் எல்லா இடங்களிலிருந்தும் வருகிறார்கள். குறிப்பாக சனிக்கிழமைகளில் வந்து தங்களுடைய பிரார்த்தனைகளை செலுத்துகிறார்கள். மேலும் மெழுகுவர்த்தி, சேலைகள், மலர்கள் என் பலவற்றையும் காணிக்கையாகத்  தருகிறார்கள்.கலாச்சாரம், மதம், மொழி, தகுதி, தரம் என்பதை மறந்து எண்ணற்ற பக்தர்கள் இக்கோயிலுக்கு வந்து நம் மாதா (சீமாட்டி) அவர்களின் கருணைக்கு பாத்திரமாகி இருக்கிறார்கள். உடல் உபாதைகள், நோய், மன அழுத்தம், வாழக்கையில் எண்ணற்ற இடர்பாடுகள், வேலை இழப்பு என பல்வேறு பிரச்னைகளை சந்திக்கும்  மக்கள் அன்னை மேரியை வழிபட்டு, அவருடைய கருணைக்கு பாத்திரமாகிறார்கள். வாழ்க்கையில் பிரச்சனையை சந்தித்தவர்களும் தீராத நோயை அனுபவித்தவர்களும் பிரமிக்கும் வகையில் குணமடைந்திருக்கிறார்கள்.

ககூசூ0 அம் வருடம் கட்டப்பட்ட ஏழைகளின் கன்னி மாதா ஆலயம் பாரிஷ் குருமார்களால்  பல வருடமாக புதுப்பிக்கப்பெற்றும் விஸ்தரிக்கப்பட்டும் உள்ளது.  ஆனால் எல்லா வசதிகளும் கொண்ட ஆலயம் வேண்டும் என்பது பக்தர்களின் தேவையாக இருந்தது. இந்த ஆசை திருவாளர்கள் ஜே. சூசை ராஜ் மற்றும் அதன் நிர்வாகத்தினர் அவர்களுடைய பெருந்தன்மையினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.  எல்லா வசதிகளுடன் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. 28-05-2011 அன்று,  பொன்விழா கொண்டாட்டத்தின் போது, மேதகு முனைவர். தாமஸ். ஏ.வாழப்பிள்ளி அவர்களால் ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டு  கன்னி மாதா அவர்களின் ஆலயம் பிரார்த்தனைக்கு தொடங்கி வைக்கப்பட்டது.

பக்தர்கள் திரு ஜே. சூசை ராஜ் அவர்களின் கருணையையும், பெருந்தன்மையையும் போற்றினாலும்  மாதாவுக்கு பூசனையினை ஏற்படுத்திக் கொடுத்த மறைந்த மேதகு முனைவர் ரினி புயூகா

அவர்களையும், மாதாவுக்கு ஆலயம் கட்டிக் கொடுத்த மேதகு முனைவர் மதாயாஸ் பெர்ணான்டஸ் அவர்களையும் நினைவு கூருகிறார்கள்.

நம் மாதா நம் அனைவரையும் எண்ணற்ற வகையில் சுவர்க்கத்தின் சுகத்தை ஆசீர்வதித்து, மேலும் நம்மை இவ்வுலகத்தை இரட்சிக்கின்ற தூய மகனார் இயேசுவின் கருணைக்கு பாத்திரமாகும்படி செய்ய வேண்டும் என்று பிரார்த்திப்போமாக ! மேரி மாதாவின் பக்தியினை பரப்ப முயற்சி செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், குறிப்பாக முன்னாள், பேராயர் அவர்களுக்கும், இன்னாள் பேராயர் மேதகு முனைவர் கே.ஆ. வில்லியம் மற்றும் அனைத்து பாரிஷ் குருமார்களுக்கும் நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

நீங்கள் கலாச்சார மற்றும் வரலாற்று புகழ் மிக்க மைசூருக்கு வரும் சந்தர்ப்பத்தை நழுவ விடாது, பயன்படுத்திக்கொண்டு, மைசூரு- பெங்களுரு நெடுஞ்சாலையில் உள்ள தேவ மாதாவின் ஆலயத்திற்க்கும் வாருங்கள்.

தேவ மாதா ஆலயத்திற்க்கு முழு நம்பிக்கையுடனும், மன உறுதியுடனும் வந்து தொழுங்கள். தேவ மாதவின் அதீத சக்தியை நீங்கள் உணர்வீர்கள். கடந்த அறுபது வருடமாக ஆயிரக்கணக்கான பக்தர்கள் எண்ணற்ற வகையில் தேவ மாதாவின் உதவிகளைப் பெற்றும் அவரது அருளுக்கு பாத்திரமாகியும் உள்ளார்கள்.

ஏழைகளின் மாதா நம்மை ஆசீர்வதிக்கட்டும்.

பாரீஷ் குருமார்கள் மற்றும் விசுவாசிகள்

பன்னிமண்டபம், மைசூரு, 570 015 தொலைபேசி 0821-4525813.

---------------------